5

# பிள்ளைக்கான கட்டுக்காப்பும் அணுகல் உரிமையும்

TML 005/**2013**

ஒன்ராறியோவில் பெண்களுக்குரிய குடும்பச் சட்டம்



## எல்லோரும் பெண்கள்.
## ஒரே குடும்பச் சட்டம்.

அறியுங்கள் உங்கள் உரிமைகளை.


flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

# பிள்ளைக்கான கட்டுக்காப்பும் அணுகல் உரிமையும்

*இந்த சிறுநூல் சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அடிப்படையான ஒரு விளக்கத்தை உங்களுக்குத் தரும் நோக்கத்துடன் வரையப்பட்டு உள்ளது. தனிப்பட்ட முறையிலான சட்ட ஆலோசனை மற்றும் உதவி என்பவற்றுக்கு இணையான ஒரு மாற்றீடாக இதனைக் கருத முடியாது. குடும்பச் சட்டம் தொடர்பிலான பிரச்சினைகளை நீங்கள் எதிர்கொள்ளும் பொழுது உங்கள் தெரிவுகளைப் புரிந்து கொள்ளவும் உங்கள் உரிமைகளைக் காப்பதற்கும், உங்களால் முடிந்த அளவு விரைவாக சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள். குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைக் கண்டுபிடித்து அவருக்குக் கட்டணமாக பணம் செலுத்துவது எப்படி என்பது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு எமது இணையத்தளம் www.onefamilylaw.ca. என்பதில் உள்ள “உங்கள் குடும்பச் சட்டப் பிரச்சினைக்கு உதவி பெறுதல்” என்ற சிறுநூலையும் “குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைத் தேடுதல்” என்ற எங்கள் வலையமாநாடு நிகழ்ச்சியையும் பார்வையிடுங்கள்.*

கனடாவில் பிள்ளைகளை வளர்த்தெடுப்பதிலும், அவர்கள் எவ்வாறு பராமரிக்கப்படுதல் வேண்டும் என்று தீர்மானம் எடுப்பதிலும், இரண்டு பெற்றோருக்கும் உரிமை உண்டு என்று சட்டம் கூறுகின்றது.

நீங்களும் உங்கள் குழந்தையின் மற்றைய பெற்றாரும் பிரிந்து போகிறீர்கள் அல்லது ஒன்றாகக் கூடிச் சீவிப்பதில்லை என்றால் உங்கள் பிள்ளையின் அன்றாட வாழ்வுபற்றியும் அவர் எங்கே வாழ்ந்துவருவார் என்பது பற்றியும் நீங்கள் திட்டங்கள் வகுக்கவேண்டும். இவ்வாறான ஏற்பாடுகளை நீங்கள் சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற உதவியுடனோ அல்லது அது இல்லாமலோ செய்ய முடியும்.

இவ்விடயத்தில் நீங்கள் இணக்கம் காணவில்லை என்றால் உங்களில் யாரோ ஒருவர் குழந்தையின் **கட்டுக்காப்பு (Custody)** அல்லது **அணுகல் உரிமை (Access)** பற்றிய ஒரு கட்டளையைப் பெறுவதற்கு நீதிமன்றத்திடம் விண்ணப்பிக்க முடியும். கட்டுக்காப்பு அல்லது அணுகல் உரிமைக்கான விண்ணப்பத்தினை உங்கள் பிள்ளை வழக்கமாக சீவிக்கின்ற மாநகரம் அல்லது நகரத்திலேயே நீங்கள் செய்ய வேண்டும். பெற்றோரில் யாராவது ஒருவரின் நிலைமையில் முக்கியமான விதத்தில் மாற்றங்கள் ஏற்படுமானால் கட்டுக்காப்பு அல்லது அணுகல் உரிமை தொடர்பாக விதிக்கப்படும் கட்டளைகளில் மாற்றங்களைக் கொண்டுவர முடியும்.

## கட்டுக்காப்பு என்றால் என்ன?

**கட்டுக்காப்பு (Custody)** என்றால் பிள்ளையின் வாழ்க்கை பற்றிய சகல முக்கிய தீர்மானங்களையும் எடுப்பதற்கான சட்டரீதியான உரிமையையும் பொறுப்பினையும் பெற்றிருக்கும் நிலையாகும். பின்வருவன போன்றவை இவற்றில் அடங்கும்:

- பிள்ளையின் பாடசாலையைத் தெரிவு செய்தல்
- பிள்ளையின் சமயத்தைத் தெரிவு செய்தல்
- பிள்ளைக்கான மருத்துவரீதியான முடிவுகளை எடுத்தல்.

கட்டுக்காப்பினைப் பெற்றிருக்கும் பெற்றவர் **கட்டுக்காப்புப் பெற்றார் (custodial parent)** எனப்படுவார். பெரும் பகுதி நேரம் பிள்ளை இக்கட்டுப்பாட்டுப் பெற்றாருடனேயே வாழ்ந்து வருவார்.

## அணுகல் உரிமை என்றால் என்ன?

பெற்றோரில் ஒருவர் கட்டுக்காப்பினைப் பெற்றிருப்பார் என்றால் மற்றைய பெற்றவர் வழக்கமாக அணுகல் உரிமையை (Access) பெற்றுக் கொள்ளுவார். இரண்டு பெற்றோருடனும் பிள்ளை தொடர்பு வைத்திருப்பது பிள்ளையின் நலனுக்குச் சாதகமானது என்று நீதிமன்றம் வழக்கமாகக் கருதுகிறது. நீதிமன்றம் **அணுகல் உரிமைக்கான** கட்டளையை வழங்கினால் அவ்வுரிமையின் கீழ் சம்பந்தப்பட்ட பெற்றவர் பிள்ளையினைச் சென்று பார்க்கவும் அப்பிள்ளையுடன் நேரத்தைக் கழிக்கவும், பிள்ளையின் ஆரோக்கியம், பொதுநலன் மற்றும் கல்வி பற்றி அறிந்து கொள்ளவும் உரிமையைக் கொண்டிருப்பார். தன் பிள்ளையுடன் முன்பு அதிக நேரம் கழித்திருக்காத ஒரு பெற்றவர் கூட வழக்கமாக இந்த அணுகல் உரிமையைப் பெறமுடியும்.

அணுகல் உரிமையைக் கொண்டிருக்கும் பெற்றவர் **கட்டுக்காப்பற்ற பெற்றார் (non-custodial parent)** அல்லது **அணுகல் உரிமைப் பெற்றார் (access parent)** எனப்படுவார்.

நீங்கள் உங்கள் பிள்ளையின் மற்றைய பெற்றவருடன் சுமுகமாகவும் நேர்மையாகவும் கதைக்க முடியுமென்றால் கட்டுக்காப்பு மற்றும் அணுகல் உரிமை தொடர்பாக உங்கள் சொந்த, முறைசாராத ஏற்பாட்டினையும் செய்யமுடியும். உங்கள் இணக்க ஏற்பாட்டினை எழுத்து வடிவில் அமைத்து, அதற்குத் திகதியிட்டு, இரண்டு பெற்றோரும் கையொப்பம் இடச் செய்வது ஒரு நல்ல யோசனையாக இருக்கும். இதனை பெற்றோரில் ஒவ்வொருவரும் ஒரு சட்டத்தரணியிடம் காட்டுவதும் அதனை நீதிமன்றத்தில் பதிவு செய்து கொள்ளுவதும் இன்னும் சிறப்பாக அமையும்.

நீங்கள் மற்றைய பெற்றவருடன் இணக்கம் காண முடியவில்லை என்றால், அல்லது உங்கள் உறவு முறை துர்ப்பிரயோக இயல்பு கொண்டதாக இருக்கிறது அல்லது இருந்தது என்றால் நீங்கள் ஒரு சட்டத்தரணியை ஏற்பாடு செய்து கட்டுக்காப்பு மற்றும் அணுகல் உரிமை ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஒரு நீதிமன்றத்திடம் செல்வது பற்றிக் கருதுவது உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் கூடிய பாதுகாப்பினை பெற்றுத்தரும்.

இருப்பினும், பிள்ளை ஒரு பெற்றவருடன் மட்டுமே வாழுகின்ற ஓர் ஏற்பாட்டினைச் செய்து, அந்த வாழும் முறைக்கான ஏற்பாட்டிற்கு இரண்டாவது பெற்றவர் இணங்கி அதனை ஏற்றுக் கொள்ளவும் முடியும். இந்த ஏற்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டால் இரண்டாவது பெற்றவர் கட்டுக்காப்பு உரிமையைக் கைவிட்டு பிள்ளைக்கான அணுகல் உரிமையை மட்டும் பெற்றிருப்பார். புதிய ஒரு ஒப்பந்தம் அல்லது நீதிமன்ற உத்தரவு இந்த ஏற்பாட்டினை மாற்றும் வரை இது தொடரும்.

## கட்டுக்காப்பு வகைகள்

கட்டுக்காப்பு ஏற்பாடுகளில் இரண்டு பிரதான வகைகள் உள்ளன:

### 1. தனியொருவர் கட்டுக்காப்பு

பிள்ளைக்குரிய **தனியொருவர் கட்டுக்காப்பினை (sole custody)** நீங்கள் பெற்றிருக்கிறீர்கள் என்றால் உங்கள் பிள்ளையின் ஆரோக்கியம், கல்வி மற்றும் சமயம் படிப்பித்தல் போன்ற விடயங்கள் பற்றிய பிரதான முடிவுகளை நீங்களே எடுக்கலாம்.

பிள்ளையின் மற்றைய பெற்றவர் நீங்கள் எடுக்கும் முடிவுகளைப் பற்றி அறியும் உரிமையைக் கொண்டிருப்பார். ஆனால் பிள்ளைக்காக எந்த முடிவுகளை நீங்கள் எடுக்க வேண்டும் என்று உங்களிடம் அவர் கூற முடியாது.

**2. கூட்டுமுறைக் கட்டுக்காப்பு**

பிள்ளைக்குரிய **கூட்டுமுறைக் கட்டுக்காப்பினை (joint custody)** நீங்கள் பெற்றிருக்கிறீர்கள் என்றால் பிள்ளையின் வாழ்க்கை பற்றிய பிரதான முடிவுகளை எடுக்கும் உரிமையை நீங்கள் மற்றும் பிள்ளையின் மற்றைய பெற்றவர் ஆகிய இருவரும் கொண்டிருப்பீர்கள். இதற்கு நீங்கள் இருவரும் சேர்ந்து செயற்பட வேண்டி இருக்கும். பெற்றோர் இருவரும் ஒத்துப் போவதில்லை என்றோ அவர்களிடையே துர்ப்பிரயோக இயல்பு இருக்கிறது அல்லது இருந்தது என்றோ நீதிமன்றம் அறியுமானால், கூட்டுமுறைக் கட்டுக்காப்புக்கு நீதிமன்றம் உத்தரவிடும் சாத்தியம் குறைவாகவே இருக்கும்.

கூட்டுமுறைக் கட்டுக்காப்பு என்றால் பிள்ளை ஒவ்வொரு பெற்றவருடனும் ஒரே அளவான வாழும் நேரத்தைக் கழிக்கிறது என்று கருதவேண்டிய அவசியமில்லை.

நீங்கள் அறிய வேண்டிய ஒன்று: நீதிமன்றம் இறுதியான ஒரு கட்டுக்காப்பு ஏற்பாடு பற்றித் தீர்மானம் எடுக்க முயற்சிக்கின்ற காலத்தின் பொழுது பெற்றோரில் ஒருவருக்கு **இடைக்கால அல்லது தற்காலிக கட்டுக்காப்பு (interim or temporary custody)** வழங்கக் கூடும். நீதிமன்றம் இறுதியான கட்டுக்காப்பு உத்தரவை வழங்கும் வரையில் இந்த ஏற்பாடு நடைமுறையில் இருக்கும். இடைக்காலக் கட்டுக்காப்பு ஏற்பாடு முக்கியமாக அமைகிறது. ஏனெனில் பிள்ளையின் நன்மைக்காக ஏற்கனவே நன்றாக இயங்கும் ஓர் ஏற்பாட்டினைத் தொடருவதற்கு நீதிமன்றம் வழக்கமாக விரும்புகிறது.

## அணுகல் உரிமை வகைகள்

நீதிமன்றம் பல்வேறுபட்ட வகைகளில் அணுகல் உரிமை உத்தரவுகளை வழங்கலாம். இவற்றில் சில சுதந்திரமான முறையில் இருக்கும். மற்றவை குறிப்பிட்ட விதத்தில் வழங்கப்படும்

### 1. நியாயபூர்வ அணுகல் உரிமை

நீதிமன்றம் பெற்றொரில் ஒருவருக்கு கட்டுக்காப்பினை வழங்கவும் மற்றவருக்கு **நியாயபூர்வ அணுகல் உரிமை** வழங்கவும் உத்தரவிடலாம். இதன்கீழ் நீங்களும் உங்கள் பிள்ளையின் மற்றைய பெற்றவரும் இருவரும் இணங்குகின்ற உங்கள் சொந்த முறையிலான அணுகல் உரிமை ஏற்பாடுகளைச் செய்ய அனுமதிக்கப்படுவீர்கள்.

### 2. நிறுவப்பட்ட அல்லது மட்டுப்படுத்திய அணுகல் உரிமை

நீங்கள் உங்கள் பிள்ளையின் மற்றைய பெற்றவருடன் ஒத்துப் போவதில்லை என்றால் நீங்கள் பிள்ளைக்கான அணுகல் உரிமை சந்திப்புக்களுக்குரிய வரையறைகளை விதிக்கின்ற ஒரு கட்டளையை வழங்கும்படி நீதிமன்றத்திடம் கேட்கமுடியும். உதாரணமாக எப்பொழுது, எவ்வளவு நேரத்துக்கு, எவ்வளவு காலத்துக்கு ஒரு முறை இச்சந்திப்புக்களை நடாத்தலாம் போன்ற வரையறைகள் இதில் அடங்கும். இது **நிறுவப்பட்ட அல்லது மட்டுப்படுத்திய அணுகல் உரிமை (fixed or limited access)** எனப்படும். உங்கள் உறவுமுறையில் துர்ப்பிரயோகம் இருக்கின்றது அல்லது இருந்தது என்றால் நீங்கள் பிள்ளையுடனான சந்திப்புகளுக்கு உரிய திகதிகளையும் நேரங்களையும் விதிக்கும்படி நீதிமன்றத்திடம் கேட்கமுடியும். இதனால் நீங்கள் மற்றைய பெற்றவருடன் இவ்விபரங்கள் பற்றிக் கதைக்க வேண்டிய தேவை இருக்கமாட்டாது.

### 3. படிமுறை அணுகல் உரிமை

நீதிமன்றம் சிலவேளைகளில் **படிமுறை அணுகல் உரிமை அட்டவணை (graduated access schedule)** ஒன்றினை ஏற்படுத்தலாம். இதன்படி அணுகல் உரிமைப் பெற்றார் ஆரம்பத்தில் பிள்ளையுடன் மிகவும் கட்டுப்படுத்திய நேரம் மட்டுமே கழிப்பார். பின்பு படிப்படியாக கூடிய நேரத்தை அவர் இவ்வாறு கழிக்க முடிகிறது. படிமுறையிலான அட்டவணை வழியாக உங்கள் பிள்ளை அணுகல் உரிமை பெற்றவரைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கும், நம்பிக்கை வைப்பதற்கும் முடிகிறது. உங்கள் பிள்ளை அணுகல் முறைப் பெற்றவருடன் முன்பு அதிக நேரம் கழித்து இருக்கவில்லை என்றால் அல்லது உங்கள் பிள்ளை மிகவும் சிறு வயதாக இருக்கையில் நீங்கள் பிரிந்து விட்டீர்கள் என்றால் நீதிமன்றம் இவ்வாறான படிமுறை அணுகல் அட்டவணையை பயன்படுத்தலாம்.

### 4. மேற்பார்வையிடப்படும் அணுகல் உரிமை

அணுகல் உரிமைப் பெற்றவருடன் பிள்ளை இருக்கையில் பிள்ளையின் பாதுகாப்பு பற்றி நீதிமன்றம் யோசனை கொள்ளுமானால், அல்லது அணுகல் உரிமைப் பெற்றவரும் குழந்தையும் முன்பு ஒன்றாக அதிக நேரம் கழிக்கவில்லை என்றால் **மேற்பார்வையிடப்படும் அணுகல் உரிமைக்கான (supervised access)** கட்டளையை வழங்கக் கூடும். மேற்பார்வையிடப்படும் அணுகல் உரிமையின் கீழ் சம்பந்தப்பட்ட பெற்றவர் பிள்ளையுடன் தனியே இருக்க முடியாது. இவர்களின் சந்திப்புக்களை மேற்பார்வையிடுபவர் குடும்பத்தின் ஓர் அங்கத்தவராகவோ அல்லது வேறொருவராகவோ இருக்கலாம். மேற்பார்வையிடப்படும் சந்திப்புக்கள் **மேற்பார்வையிடப்படும் அணுகல் உரிமை நிலையங்கள் (supervised access centres)** எனப்படும் இடங்களிலும் நடைபெறலாம். சந்திப்புக்களை மேற்பார்வையிடும் பணியாளர்கள் இங்கு இருக்கிறார்கள்.

நீங்களும் மற்றைய பெற்றவரும் பிள்ளையினைக் கையளிப்பதற்குச் சந்திக்கும் பொழுது முரண்பாடு அல்லது பிள்ளையின் பாதுகாப்பு பற்றி நீதிமன்றம் யோசனை கொள்ளுமானால் அது **மேற்பார்வையிடப்படும் அணுகல் உரிமைப் பரிமாற்றத்துக்கு (supervised access exchanges)** கட்டளையிடவும் முடியும். மேற்பார்வையிடப்படும் அணுகல் உரிமை பரிமாற்றங்கள் ஒரு மேற்பார்வையிடப்படும் அணுகல் உரிமை நிலையத்தில் நடைபெறலாம். இங்குள்ள பணியாளர்கள் உங்களுக்கும் மற்றைய பெற்றவருக்கும் இடையில் பிள்ளையினைக் கையளிப்பதற்கு உதவுவர். நீங்கள் ஒருவருடன் ஒருவர் நேரடியாகத் தொடர்பு கொள்ளுவது இதனால் தவிர்க்கப்படும். இவ்வாறான அணுகல் உரிமை பரிமாற்றம் ஒரு காவல் நிலையம் போன்ற பாதுகாப்பான இடத்திலும் நடைபெறலாம்.

**5. அணுகல் உரிமை இல்லாமை**

மிக அரிதான சந்தர்ப்பங்களில் ஒரு பெற்றவருக்குத் தனது பிள்ளை விடயத்தில் **அணுகல் உரிமை மறுக்கப்படலாம் (denied access)**. சம்பந்தப்பட்ட பெற்றவரினால் பிள்ளைக்கு உடல் ரீதியாகவோ உணர்வுகள் ரீதியாகவோ தீங்கு இழைக்கப்படலாம் என்றும், மேற்பார்வையிடப்படும் அணுகல் உரிமை ஏற்பாடு பிள்ளைக்குப் போதிய பாதுகாப்பினை வழங்க மாட்டாது என்றும் நீதிமன்றம் நம்பும் பொழுது மட்டுமே இவ்வாறு அணுகல் உரிமை மறுக்கப்படுகிறது.

## பிள்ளை வசிக்கும் இடம்

தனியொருவர் கட்டுக்காப்பு உங்களுக்கு வழங்கப்பட்டு இருக்குமானால் பிள்ளை உங்களுடன் பெரும்பகுதி நேரம் அல்லது முழுநேரமும் வசிக்கும்.

பிள்ளை எங்கே வசிக்கும் என்பதை கட்டுக்காப்பு எப்பொழுதும் தீர்மானிப்பதில்லை. உங்களுக்கு மற்றைய பெற்றவருடன் சேர்ந்து கூட்டுமுறைக் கட்டுக்காப்பு இருக்கும் என்றால், அல்லது மற்றைய பெற்றவருக்கு அணுகல் உரிமை இருக்கும் என்றால், பிள்ளை உங்கள் இருவருடனும் நேரத்தைப் பங்கிட்டு வசித்து வரும். நீங்கள் இணங்கிக் கொள்வதற்கு ஏற்ப அல்லது நீதிமன்றம் கட்டளையிடுவதற்கு ஏற்ப பிள்ளை சில வேளைகளில் மற்றைய பெற்றவருடன் இரவுகளில், வார இறுதி நாட்களில், வாரநாட்களில் அல்லது விடுமுறை நாட்களில் தங்கக் கூடும்.

ஒரு பிள்ளை ஒரு பெற்றவரை காட்டிலும் மற்றைய பெற்றவருடன் கூடிய நேரத்தைக் கழிப்பது வழக்கம். இவ்வாறு நிகழும் பொழுது பிள்ளை அதிக நேரத்தைக் கழிக்கும் வீடு பிள்ளையின் **முதன்மை வசிப்பிடம் (primary residence)** எனக் கூறப்படும்.

பெரும்பகுதி நேரம் பிள்ளையினைப் பராமரிக்கும் பெற்றவர் **முதன்மைப் பராமரிப்பாளர் (primary caregiver)** என்று அழைக்கப்படுகிறார். ஒரு பிள்ளையின் வாழ்க்கையில் பெரும்பகுதி நேரம் அதற்கான முதன்மைப் பராமரிப்பாளராக இருந்தவருடன் அல்லது கட்டுக்காப்பு பற்றி நீதிமன்றம் முடிவு எடுக்கும் சமயத்தில் பிள்ளையின் முதன்மைப் பராமரிப்பாளராக இருப்பவருடன் பிள்ளைகள் தொடர்ந்து வசிக்கவேண்டும் என்றே பெரும்பாலும் நீதிமன்றங்கள் தீர்மானிக்கின்றன.

## கட்டுக்காப்பு மற்றும் அணுகல் உரிமைக் கட்டளைகளைப் பின்பற்றுதல்

கட்டுக்காப்பு மற்றும் அணுகல் உரிமை பற்றிய ஒப்பந்தம் அல்லது கட்டளை ஒன்று உங்களுக்கு இருப்பின், நீங்கள் அதனைக் கட்டாயம் பின்பற்றியே ஆக வேண்டும். நீங்கள் அல்லது பிள்ளையினது மற்றைய பெற்றவர் கட்டுக்காப்புக் கட்டளையை நடைமுறைப்படுத்துவதற்கான உதவியைப் போலிசாரிடம் கோர முடியும். நீங்கள் கட்டளையில் கூறப்பட்டுள்ளதன்படி உங்கள் பிள்ளையின் மற்றைய பெற்றவரைப் பார்வையிட மறுப்புத் தெரிவித்தால் அவர் நீதிமன்றத்திடம் கட்டுக்காப்பினைத் தனக்கு மாற்றும்படி விண்ணப்பித்தால் அப்படி மாற்றப்படலாம்.

பிள்ளையினது பாதுகாப்புப் பற்றிய பயம் உங்களுக்கு இருக்குமேயானால் நீங்கள் அணுகல் உரிமையை மறுக்க சட்டம் இடமளிக்கின்றது. அப்படி நீங்கள் பயந்து அணுகல் உரிமையை மறுப்பதாயின், உடனடியாக சட்ட உதவியை நாடுங்கள். அவசர நிலைமையின் கீழ் 911 என்ற இலக்கத்தில் காவல் துறையினரை அழையுங்கள்.

சிலவேளைகளில், ஒரு பெற்றவர் அணுகல் உரிமைமைக்காகப் போராடி விட்டு கட்டளையில் குறிப்பிட்ட நேரப் பிரகாரம் பிள்ளையைப் பார்க்க வராது இருக்கலாம். இது பிள்ளைக்கு குழப்பத்தினை ஏற்படுத்தலாம் எனினும் துரதிர்‘டவசமாக, தமக்கு வழங்கப்பட்ட நேரத்தினைப் பயன்படுத்துமாறு அணுகல் உரிமைப் பெற்றாரை நிர்ப்பந்திக்கும் வகையில் சட்டம் எதனையும் செய்ய முடியாது உள்ளது. இது கிரமமாக நடைபெறுமானால், தவறவிடப்பட்ட அல்லது குறுகிய கால வருகைகள் பற்றிய விபரத்தைக் குறித்து வையுங்கள். அணுகல் உரிமைக் கட்டளையை மாற்றுவதற்கு நீதிமன்றத்திடம் மீண்டும் சென்று கேட்பதற்கு இந்தத் தகவலை நீங்கள் பயன்படுத்தக் கூடியதாக இருக்கலாம்.

## கட்டுக்காப்பு மற்றும் அணுகல் உரிமை பற்றி நீதிமன்றங்கள் எவ்வாறு தீர்மானம் எடுக்கின்றன?

கட்டுக்காப்பு மற்றும் அணுகல் உரிமை பற்றி நீதிமன்றம் ஒரு தீர்மானம் எடுக்கும் போது, அது **பிள்ளையினது சிறந்த நலன்கள் (best interests of the child)** பற்றிக் கருத்தில் கொள்ளல் வேண்டும். இது ஒரு கண்டிப்பான சட்டபூர்வ வரைவிலக்கணம் ஆகும். நீதிமன்றம் கவனத்தில் கொள்கின்ற சில விடயங்கள் பின்வருமாறு:

- வீட்டுச்சூழலில் துர்ப்பிரயோகம் ஏதும் இருந்துள்ளதா?
- பிள்ளைக்கும் ஒவ்வொரு பெற்றவருக்கும் இடையிலான உறவுமுறை எவ்வளவு தூரம் அன்பானது?
- பிள்ளைக்கும் ஒவ்வொரு பெற்றவருக்கும் இடையில் உள்ள உணர்வு பூர்வமான பாசப் பிணைப்பு எவ்வளவு வலுவானது?
- நிலையான சூழலில் பிள்ளை எவ்வளவு காலம் வாழ்ந்துள்ளது?
- பிள்ளையினது பராமரிப்பு மற்றும் வளர்த்தெடுப்பில் ஒவ்வொரு பெற்றவரும் கொண்டுள்ள திட்டங்கள் யாவை?
- பெற்றோரில் ஒவ்வொருவரும் எந்த அளவுக்கு நல்ல ஒரு பெற்றவராயிருக்க முடியும்?
- பிள்ளைக்கு வசதிகளை வழங்குவதற்கு ஒவ்வொருவருக்கும் எந்த அளவு முடியும்?
- வளர்ந்த பிள்ளைகள் விடயத்தில், பிள்ளை எதனை விரும்புகிறது?

குடும்பச் சட்ட நீதிமன்றங்கள் ஏற்கனவே உள்ள ஒழுங்குகளையும் பார்வையிடுகின்றன. இது **நடைமுறை நிலை (status quo)** என அழைக்கப்படுகின்றது. பிள்ளையினது வாழிட ஒழுங்குமுறை நன்கு செயற்படுவதாக இருப்பின், பெரிய அளவிலான மாற்றங்களை நீதிமன்றம் வழமையாகச் செய்ய மாட்டாது.

கட்டுக்காப்பு மற்றும் அணுகல் உரிமையினைப் பெறுவதற்கு பெறறோர் மட்டுமே விண்ணப்பிக்க முடியும் என்பதில்லை. அதற்கு எவரும் விண்ணப்பிக்கலாம் என்று சட்டம் கூறுகின்றது. சில சந்தர்ப்பங்களில் விரிவுபடுத்தப்பட்ட குடும்ப அங்கத்தவர்கள் உ-ம்: பாட்டன் பாட்டியர், மாற்றாந்தாய் தகப்பன் அல்லது அத்தை மாமன் ஆகியோரும் நீதிமன்றத்தில் இதனைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கின்றனா். எனினும், யார் விண்ணப்பிக்கின்றனர் என்பதைப் பொறுத்து அல்லாது கட்டுக்காப்பு அல்லது அணுகல் உரிமையை வழங்க முன்பு பிள்ளையினது சிறந்த நலன்களையே நீதிமன்றம் கருத்தில் கொள்ளும்.

## பிள்ளைகளுடன் இடம் பெயர்தல்

பெற்றோர் ஒன்றாகக் கூடி வாழாத சந்தர்ப்பங்களில் எழும் ஒரு க்'டமான விடயம் எதுவெனில், பிள்ளையுடன் கூட வாழும் பெற்றவர் அப்பிள்ளையை நகரத்திற்கு வெளியே, அல்லது சில சந்தர்ப்பங்களில் மாகாணத்திற்கு வெளியே அல்லது நாட்டிற்கு வெளியே கூட, இடம் மாற்ற முடியுமா என்பதாகும். நீங்கள் ஏனைய குடும்ப அங்கத்தவர்களின் ஆதரவுக்காக அல்லது வேலை வாய்ப்பினுக்காக இடம் மாற விரும்பக்கூடும். இத்தகைய இடமாற்றம் உங்கள் பிள்ளையின் மற்றைய பெற்றவருக்கு கிரமமான முறையில் பிள்ளையைச் சந்திப்பதனைக் கடினமாக்கக் கூடும். இடம் மாறும் தூரத்தினைப் பொறுத்து, சந்திக்க வரும் செலவும் ஒரு பிரச்சினை விடயமாக மாறலாம்.

பிள்ளை தொடர்பான எல்லா முடிவுகளைப் போன்றும், இடமாற்றத்திற்கான அனுமதியை நீதிமன்றம் தீர்மானிப்பது **பிள்ளையினது சிறந்த நலன்களின்** அடிப்படையில் ஆகும். நீங்கள் உங்கள் பிள்ளையுடன் இடம் மாற அனுமதிக்கப்பட்டால், நீதிமன்றம் அணுகல் உரிமை ஒழுங்குகளில் அணுகல் உரிமை கொண்ட பெற்றவர் நீண்ட நேரம் சந்திப்பதற்கு அனுமதிக்கக் கூடும். அல்லது மற்றைய பெற்றவருக்கு அணுகல் உரிமை தொடர்பாகக் கூடிய பயணச் செலவுகள் இருப்பதன் காரணமாக நீங்கள் பிள்ளைக்கெனப் பெறும் ஆதார உதவித்தொகைப் பணத்தினைக் குறைக்கக்கூடும்.

சில சந்தர்ப்பங்களில் மற்றைய பெற்றவர் இணங்காது போனால் நீங்கள் பிள்ளையுடன் இடம் பெயருவதற்கு அனுமதிக்க முடியாது என்று நீதிமன்றம் கூறலாம்.

## பிள்ளைகளுடன் பிரயாணம் செய்தல்

அநேகமான சந்தர்ப்பங்களில், மற்றப் பெற்றவருக்கு கட்டுக்காப்பு அல்லது அணுகல் உரிமை இருக்குமானால் மற்றப் பெற்றவரின் அனுமதி இன்றி ஒரு பெற்றவர் பிள்ளையைக் கனடாவுக்கு வெளியே கூட்டிச் செல்ல முடியாது. நீங்கள் உங்கள் பிள்ளைகளுடன் பயணம் செல்வதாயின், கட்டுக்காப்புக் கட்டளை மற்றும் மற்றப் பெற்றவர் கனடாவுக்கு வெளியே பிள்ளைகள் செல்ல அனுமதி வழங்கும் கடிதம் என்பவற்றை நீங்கள் வைத்திருக்க வேண்டும். இந்தக் கடிதம் ஒரு வழக்கறிஞரால் உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

நீங்கள் கனடாவில் இருந்து புறப்படுகையில் அத்துடன்/அல்லது இன்னொரு நாட்டில் புகும்பொழுது, எல்லைக் காவலர்கள் பிள்ளையினது மற்றைய பெற்றவர் பிள்ளையின் பயணத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளார் என்பதை நிரூபிக்கும்படி உங்களிடம் கேட்பதை நீங்கள் எதிர்பார்க்க வேண்டும்.

## பிள்ளை கடத்துதல்

சில வேளைகளில் ஒரு பெற்றவர், மற்றைய பெற்றவரின் அனுமதியின்றி பிள்ளையினை கனடாவுக்கு வெளியே அழைத்துச் செல்லுவதும் உண்டு. இது மிகவும் பாரதூரமான செயலாகும். இது **பிள்ளை கடத்துதல் (child abduction)** என்று அழைக்கப்படும். பிள்ளை கடத்துதல் கனடாவில் ஒரு பாரதூரமான குற்றச்செயல் ஆகும்.

கனடாவை விட்டு உங்கள் அனுமதி இல்லாமல் உங்கள் பிள்ளை எடுத்துச் செல்லப்படுவதை முற்று முழுதாகத் தடுப்பதற்கு முடியாது என்றபோதிலும், நீங்கள் உங்கள் பிள்ளையைப் பாதுகாக்கவெனச் செய்யக் கூடிய சில விடயங்கள் உள்ளன. உங்கள் கட்டுக்காப்புக் கட்டளை அல்லது ஒப்பந்தம் பின்வருமாறு இருப்பதை உறுதிப்படுத்துங்கள்:

- இயலுமனானவரை தெளிவாகவும் விபரமாகவும் இருப்பது
- உங்கள் அனுமதி இல்லாமல் பிள்ளை கனடாவை விட்டு வெளியில் பயணம் செய்ய முடியாது என்று குறிப்பாகச் சொல்லி இருப்பது

பிள்ளையினது கடவுச்சீட்டு அல்லது மற்றைய பெற்றவரின் கடவுச்சீட்டு உங்கள் பாதுகாப்பில் அல்லது நீதிமன்றத்தின் பாதுகாப்பில் இருக்க வேண்டும் எனவும் கட்டளையில் மேலும் குறிப்பிடப்பட்டு இருக்கலாம்.

## உங்கள் அனுமதி இல்லாமல் பிள்ளை கனடாவைவிட்டு வெளியே கூட்டிச் செல்லப்பட்டு இருந்தால் என்ன செய்வது

உங்கள் அனுமதி இல்லாமல் நாட்டைவிட்டு உங்கள் பிள்ளை கூட்டிச் செல்லப்பட்டுள்ளதாக நீங்கள் நினைத்தால் நீங்கள் செய்யவேண்டியவை:

- உடனடியாக நீங்கள் **காவல்துறையினரை அழைக்க வேண்டும்**. காவல்துறையினர் கனடாவின் எல்லைக் காவலர்களுக்கும், மற்றைய பெற்றவர் உங்கள் பிள்ளையைக் கூட்டிச் செல்லக்கூடிய நாட்டின் எல்லைக் காவலர்களுக்கும் ஓர் எச்சரிக்கையை அனுப்புவார்கள்.
- உடனடியாக 1-800-387-3124 அல்லது 1-800-267-6788 என்னும் கட்டணமில்லாத இலக்கத்தில் **தூதரக அலுவல்கள் பணியகத்தை (Consular Affairs Bureau) அழையுங்கள்**. அவர்களது அலுவலகம் 7 நாட்களும் 24 மணிநேரமும் திறந்திருக்கும்.

உங்கள் அனுமதியின்றி உங்கள் பிள்ளை கனடாவுக்கு வெளியே அழைத்துச் செல்லப்பட்டால் நீங்கள் ஒரு குடிவரவுச் சட்டத்தரணி மற்றும் ஒரு குடும்பச் சட்ட சட்டத்தரணி ஆகிய இருவருடனும் உடனடியாக அதுபற்றிக் கதைக்க வேண்டும்.

உங்களது பிள்ளைகளைத் திரும்பப் பெற உங்களுக்கு உதவக்கூடிய முக்கியமான சட்டம் *சர்வதேச பிள்ளை கடத்துதலின் குடிமுறை அம்சங்களுக்கான ஹேக் சட்ட சாசனம் (Hague Convention on the Civil Aspects of International Child Abduction)* ஆகும். இது பல நாடுகள் கைச்சாத்திட்டுள்ள ஒரு சர்வதேச பிரகடனம் ஆகும். இதில் கைச்சாத்திட்டுள்ள நாடுகள் தாம் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குச் சட்ட விரோதமாக இடம் மாற்றப்பட்டுள்ள பிள்ளைகளைக் கண்டுபிடித்து திரும்ப அனுப்ப ஒன்றோடு ஒன்று சேர்ந்து செயற்பட சம்மதம் தெரிவித்துள்ளன.

இந்தச் சாசனத்தில் கையெழுத்திடாத நாடொன்றுக்கு உங்கள் பிள்ளை கொண்டு செல்லப்பட்டிருந்தால், கனடாவுக்கு உங்கள் பிள்ளையைத் திரும்பவும் கொண்டுவருவது அதிக சிரமமான விடயமாக இருக்கும். இது நடைபெற்றால், உங்கள் பிள்ளை கொண்டு செல்லப்பட்ட நாட்டின் சட்டங்களின் அடிப்படையில் நீங்கள் கட்டுக்காப்புக்காகப் போராடலாம். கடத்தல்காரர் மற்றும் அவரது குடும்பத்தினருடன் நீங்கள் பேசி ஒரு முடிவுக்கு வருவதற்கும் முயற்சிக்கலாம்.

சர்வதேச கடத்துதலைத் தடுத்தல் எப்படி என்பது பற்றி மேலதிக விபரம் பெற *சர்வதேச பிள்ளைக் கடத்துதல்: பெற்றோருக்கான கையேடு (International Child Abductions: A Manual for Parents)* என்ற வெளியீட்டை வாசியுங்கள். இந்தச் சிறுநூல் கனடாவின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் தயாரிக்கப்பட்டு உள்ளது. உங்கள் பிள்ளை உங்களது அனுமதியின்றி கனடாவுக்கு வெளியே கொண்டு செல்லப்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் இதில் கூறப்பட்டுள்ளது. நீங்கள் இதன் ஒரு பிரதியை Foreign Affairs Canada அமைப்பில் இருந்து பெற்றுக் கொள்ளலாம் அல்லது இக்கைநூலைக் கணினியில் http://www.voyage.gc.ca/ என்னும் இணையத் தளத்தில் வாசிக்கலாம். “பிள்ளைகள் மற்றும் பிரயாணம்” என்பதில் அழுத்திய பின்பு “பிள்ளைக் கட்டுக்காப்பு/நலன்” என்பதில் அழுத்துங்கள்.

Ontario

- *இவ்வெளியீடுகளில் கூறப்படும் கருத்துக்கள் FLEW அமைப்பின் கருத்துக்கள் ஆகும். அவை மாகாண அரசின் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றன என்று கருத முடியாது.*

The Law Foundation of Ontario
Building a better foundation for justice in Ontario

- *ஒன்ராறியோ சட்ட நிறுவனத்தின் நிதியுதவியுடன் வெளியிடப்படும் போதிலும் இவ்வெளியீட்டின் உள்ளடக்கம் அந்த நிறுவனத்தின் கருத்துக்களைப் பிரதிபலிக்கின்றது என்று கருத முடியாது.*

*நெருக்கமான உறவு ஒன்று முடிவுக்கு வரும்பொழுது வன்முறை தோன்றலாம் என்ற ஆபத்து பெரிதும் இருக்கிறது. உங்களுக்கு உடனடியாக ஆபத்து நேரிடும் நிலைமை இருந்தால் 911 தொலைபேசி இலக்கத்தை அழையுங்கள். நீங்களோ உங்களுக்குத் தெரிந்த ஒருவரோ ஆபத்தை எதிர்நோக்கினால் தகுந்த உதவி பெறுவதற்குரிய தகவலினைப் பெற www.onefamilylaw.ca என்ற இணையத்தளம் சென்று பாருங்கள்.*

*நீங்கள் பிரெஞ்சு மொழி பேசும் ஒரு பெண்ணாக ஒன்ராறியோவில் வாழ்ந்து வருகிறீர்கள் என்றால் குடும்பச் சட்ட நீதிமன்ற நடைமுறைகளின் பொழுது பிரெஞ்சு மொழியில் சேவைகளைப் பெறுகின்ற உரிமை உங்களுக்கு உண்டு. உங்கள் உரிமைகள் பற்றி நீங்கள் மேலதிக தகவல் பெறுவதற்கு ஒரு சட்டத்தரணி அல்லது ஒரு சமூக சட்ட உதவி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்: அல்லது பெமெயிட் (குநஅயனைந) என்று அழைக்கப்படும் ஆதாரத் தொலைபேசி இணைப்புடன் 1-877-336-2433 என்ற எண்ணிலும், செவிப்புலன் குறைந்தவர்கள் அதன் 1-866-860-7082 என்ற எண்ணிலும், தொடர்பு கொள்ளலாம்.*

*பிரெஞ்சு மொழியில் சேவைகள் பெறுவது எப்படி என்பது பற்றிய மேலதிக தகவலினை www.onefamilylaw.ca அல்லது www.undroitdefamille.ca. என்ற எங்கள் இணையத்தளத்திலும் நீங்கள் பார்க்க முடியும்.*

## தமிழில் பெறக்கூடியதாக உள்ள குடும்பச் சட்ட விடயங்களின் தலைப்புகள்*

1. மாற்றுமுறைச் சர்ச்சைத் தீர்வும் குடும்பச் சட்டமும் (TML 001)
2. பிள்ளைப் பாதுகாப்பும் குடும்பச் சட்டமும் (TML 002)
3. பிள்ளை ஆதார உதவித் தொகை (TML 003)
4. குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம் (TML 004)
5. **பிள்ளைக்கான கட்டுக்காப்பும் அணுகல் உரிமையும் (TML 005)**
6. குடும்பச் சார்பு உடன்படிக்கைகள் (TML 006)
7. குடும்பச் சட்டச் சமரசம் (TML 007)
8. குடிவரவாளர்களாக, அகதிகளாக, மற்றும் குடிவரவு அந்தஸ்து இல்லாதவர்களாக உள்ள பெண்கள் சம்பந்தப்பட்ட குடும்பச் சட்டப் பிரச்சினைகள் (TML 008)
9. குடும்பச் சட்டம் சம்பந்தமான உங்கள் பிரச்சினைக்கு உதவி பெறும் வழி கண்டறிதல் (TML 009)
10. குடும்பச் சட்டத்தில் சொத்து எவ்வாறு பிரிக்கப்படுகிறது (TML 010)
11. திருமணமும் விவாகரத்தும் (TML 011)
12. வாழ்க்கைத் துணையாள் ஆதார உதவித் தொகை (TML 012)

* *இந்த சிறுநூல் பல வடிவங்களிலும் பல மொழிகளிலும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. இது பற்றி மேலதிக தகவல் பெறுவதற்கு www.onefamilylaw.ca என்ற இணையத் தளத்தைப் பாருங்கள். உங்கள் குடும்பச் சட்ட உரிமைகளை நீங்கள் புரிந்து கொள்வதற்கு உதவும் வகையில் இந்த இணையத் தளத்திலும் மேலதிக விடயங்களை நீங்கள் காண முடியும்.*

flew Family Law Education for Women
Women's Right to Know
fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir